Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 309 / 2018

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | பதஞ்சலி | Calling: | எலக்ட்ரிசியன் |
| Father's Name: | கோவிந்தசாமி | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 47 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 22.04.2026

(புகார்தாரர் ஆஜர்)

எ.த.சா.3 முதன்மை விசாரணை.

புகார்தாரரை தெரியும். புகார்தாரருக்கும் எனக்கும் 2012 முதல் பழக்கம். எனது நண்பர் கார்த்திக் என்பவர் மூலம் நான் அவரு
க்கு பணம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தேன். ஆரம்பத்தில் அவர் என்னிடம் ரூ.30,000, ரூ.50,000 என புகார்தாரர் எனக்கு கொடுத்து வந்தார். நான் வட்டிக்கு வாங்கி வந்திருந்தேன். 2016 ல் ஜீன் மாதத்தில் நான் அவரிடம் நான் ரூ.2,50,000 த்தை 2 சதவீத வட்டி என வாங்கினேன். 2017 ம் ஆண்டு வரை அதற்கு வட்டி சரியாக கட்டிவந்தேன். பிறகு வீட்டில் என் அப்பாவிற்கும் என் குழந்தைக்கும் ஏற்பட்ட உடல் நிலை சரியில்லாத காரணத்தால் வட்டியை சரியாக கட்டமுடியவில்லை. 2013 ல் ரமேஷ் என்பவர் என்வீட்டிற்கு வாடகைக்கு குடிவந்தார். அவர் என் மீது புகார் கொடுத்து STC.No.307/2018 என வழக்கு நடந்தது. 2015 ல் அவர் என் வீட்டை விட்டு காலி செய்துவிட்டார். 2017 ல் ஆம்பூரை சேர்ந்த நபர்களை குடிவைத்தேன். அவர்களுக்கு ரூ.35,000 முன்பணம் என்றும் மாதம் ரூ.3,500 வாடகை என குடிவைத்தேன். ஐந்தாம் மாதத்தில் குடிவந்தார்கள். 21.04.2018 ம் வருடம் ரமேஷ்யும் செல்வராஜீம் இரவில் என் வீட்டிற்கு வந்து என்னை

அடித்து வலுக்கட்டாயமாக துன்புறுத்தி நான் வைத்திருந்த கரூர்வைசிய வங்கியின் நான்கு காசோலைகள், ரூ.20, ரூ.50 பாண்ட் பேப்பர்கள், வெற்று வெள்ளை தாள் அனைத்தையும் என்னை அடித்து வாங்கிக்கொண்டார்கள். உயிருக்கு பயந்து நானும் கொடுத்துவிட்டேன். பிறகு ரூ.15 லட்சம் கொடுக்க சொல்லியும் இல்லை என்றால் வீட்டை கிரையம் செய்யுமாறு சொன்னார்கள். ஆனால் அவ்வீட்டை நான் மேகனா பைனான்ஸ்சில் வைத்து லோன் வாங்கி இருந்தேன். 03.05.2018 தேதி ஆம்பூர்காரரை குடிவைத்திருந்த நிலையில் அவர்களை மிரட்டி ரூ.35,000/–ஐ அட்வான்ஸ் ஆம்பூர்காரருக்கு கொடுத்துவிட்டு அவர்களை வீட்டை காலி செய்யும்படி சொன்னதால் அவரும் காலி செய்துவிட்டார். மேல்வீட்டையும் பூட்டிவிட்டார்கள். 13.05.2018ம் தேதி கேவிட் மனு தாக்கல் செய்திருப்பதாக கூறி வீடு அவர்களுக்கு சொந்தம் என அறிவிப்பு ஒட்டிவிட்டார்கள். அது சம்மந்தமாக 14.05.2018ம் தேதி வேலூர் எஸ்.பி. ஆபிசில் புகார் கொடுத்தேன். அந்த புகார் கொடுத்ததற்கான புகார் மனு ஏற்பு மற்றும் ரசீது ஆவணம் தாக்கல் செய்கிறேன். **அந்த வேலூர் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு ஏற்பு மற்றும் ரசீது ஆவணம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

28.05.2018ம் தேதி காசோலையை அடித்து எடுத்து சென்றது சம்மந்தமாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம் மற்றும் நியூடவுனில் உள்ள காவல் துணைக்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். **வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம் மற்றும் நியூடவுனில் உள்ள காவல் துணைக்கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார்கள் முறையே எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நாங்கள் வறுமையின் காரணமாக வீட்டில் இருப்பதில்லை. வேலைக்கு சென்றுவிடுவோம். புதூரிலுள்ள என் அப்பா வீட்டிற்கு இம்மூன்று அறிவுப்புகள் வந்திருப்பதாக என் அம்மா கூறினார். நான் வேலையிலிருந்து வந்து 17.05.2018ம் தேதி பார்த்துவிட்டு திருப்பத்தூரிலுள்ள தணிகாச்சலம் வழக்கறிஞரிடம் அறிவிப்பை காட்டினேன். அவர் நடந்ததை பற்றி கேட்டார், நான் கூறினேன். 2012ம் ஆண்டிலிருந்து செல்வராஜிடம் ரூ.2,50,000/– ரமேஷ் என்பவரிடம் ரூ.2,00,000/– வாங்கியதை பற்றி கூறினேன். அதன்பிறகு பதிலறிவிப்பு அனுப்பினோம். நான் வாங்கியது இவ்வளவு மட்டும் தான். அந்த அறிவிப்பில் STC 307/2018ல் ரூ.4,00,000/–ம், STC 309/2018ல்

ரூ.4,00,000/–ம் வாங்கியதாக அறிவிப்பில் இருந்தது. ஆனால் நான் இரண்டு பேருக்கும் சேர்த்து ரூ.4,50,000/–தான் கொடுக்க வேண்டும் என 2018ல் பதிலறிவிப்பு அனுப்பினேன். 2020ம் வருடத்தில் என் மகனுக்கு வலிப்பு நோய் வந்தது. பிறகு வாணி பள்ளியிடம் உள்ள என் வீட்டின் மற்றொரு சாவியை எடுத்துக்கொண்டு வீட்டில் இருந்தார்கள். 04.06.2020ம் தேதி ரவுடிகளை கூட்டி வந்து என் வீட்டில் கலாட்டா செய்து வீட்டை விட்டு காலி செய்யுமாறு கூறினார்கள். அதனால் என் மனைவி மோகனா கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அவர்கள் அதை விசாரிப்பதாக கூறி அமைதியாகிவிட்டார்கள். பின் எஸ்.பி. ஆபிஸ் சென்று புகார் கொடுத்தார்கள். அப்போது கிராமிய காவல் நிலையத்தில் ரமேஷ் என்பவர் அவருக்கும் அவரது அண்ணன் செல்வராஜ்க்கும் ரூ.4,50,000/–தான் கொடுக்க வேண்டும் என்றும், வீட்டிற்கு கொடுத்த முன்பணம் ரூ.35,000/–யும் கொடுக்க வேண்டும் என அவர்கள் எழுதி கொடுத்தார்கள். **அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். என் மனைவி கிராமிய காவல் நிலையம் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார்கள் மற்றும் ரமேஷ் என்பவர் எழுதிகொடுத்தது முறையே எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (இந்த புகாரை குற்றம்சாட்டப்பட்டவரின் மனைவி கொடுத்தார் என்பதற்காக அதை அவர் மூலம் தான் குறியீடு செய்யவேண்டும் என கூறி புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) எனக்கு இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும். ரூ.4,50,000/–ற்கு பாக்கி எவ்வளவு உள்ளதோ அதை நான் கொடுத்து விடுகிறேன்.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் பு.சா.ஆ.2 காசோலை என்னுடையது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான், அடித்து வாங்கி கொண்டார்கள். என்னை எந்த தேதியில் அடித்து ஆவணங்களை எடுத்து சென்றார்கள் என்றால் 21.04.2018ம் தேதி.என் வீட்டிலிருந்து கிராமிய காவல் நிலையம் எவ்வளவு தொலைவு என்றால் 2 கி.மீ.21.04.2018ம் தேதி என்னை அடித்து மிரட்டி மேற்சொன்ன ஆவணங்களில் கையொப்பம் பெற்றுச்சென்றதாக அன்றைய தினத்தில் கிராமிய காவல் நிலையத்தில் இந்த புகார்தாரர் மீது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அதன்பிறகு அந்த சம்பவம் குறித்து எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் 14.05.2018ல் கொடுத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எப்போது

வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது என்றால் 16.06.2018ம் தேதி என் அம்மா கூறி தான் தெரியும், ஆனால் அந்த அறிவிப்பு 12.05.2018ம் தேதி வந்திருந்தது. நான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு 11.05.2018ம் தேதியிட்டு தான் வந்திருந்தது என்றால் சரியாக நினைவில்லை. 11.05.2018ல் வந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் எப்போது பதிலறவிப்பு அனுப்பினேன் என்றால் 18.06.2018ம் தேதி.

மேற்படி அறிவிப்பானது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி காலதாமதமாக அனுப்பப்பட்ட அறிவிப்பு என என் வழக்கறிஞர் கூறினானா என்றால் இல்லை. அது குறித்து என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 11.05.2018ம் தேதிக்கான வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு தான் நான் புகார்தாரரின் மீது வேலூர் எஸ்பி ஆபிஸில் 14.05.2018ல் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் நான் எனது முதன்மை விசாரணையில் சங்கதிகளை குறிப்பிட்டு தான் புகாரளித்துள்ளேன் என்றால் சரிதான். 14.05.2018ம் தேதியிட்ட வேலூர் எஸ்பி ஆபிஸில் அளிக்கப்பட்ட புகார் மனு எனது கையிருப்பில் இருந்த புகார்மனு என்றால் சரிதான், அதை குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேட்டபோது இல்லை என சொன்னதால் நான் என் கையில் இருந்த மனுவை தாக்கல் செய்தேன். எ.த.சா.1 ஆனது 14.05.2018ம் தேதி என்னால் வேலூர் எஸ்பி ஆபிஸில் கொடுக்கப்பட்டது இல்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக என்னால் பொய்யாக புனையப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல.

இவ்வழக்கு என் மீது எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது நினைவில்லை, 2018ல் இந்நீதிமன்றத்தில் ஆஜரானேன். 25.06.2018ம் தேதி தான் புகார்தாரரால் வழக்கு என் மீது தாக்கல் செய்யப்பட்டு அதன்பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜரானேன் என்றால் சரிதான். 28.05.2018ல் டி.எஸ்.பியிடமும், அன்றைய தினமே கிராமிய காவல் நிலையத்தில் பதிவஞ்சல் மூலம் புகார் கொடுத்தது தான் எ.த.சா.2 என்றால் சரிதான். அந்த புகார் மனு மேற்கண்ட முகவரிக்கு சென்று சேர்ந்ததா இல்லையா என்ற அஞ்சல் ஒப்புகை அட்டை எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த புகார் சம்மந்தமாக என்னையோ, புகார்தாரரையோ அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் STC 307/2018 என்ற வழக்கில் என் மீது பிடிகட்டளை இருந்ததால்

தலைமறைவாக இருந்தேன் என்றால் சரியல்ல, நான் வேலைக்கு தான் சென்றிருந்தேன். நான் தலைமறைவாக இருந்ததால் தான் பதிவஞ்சல் மூலம் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எ.த.சா.2 ஆனது மேற்கண்ட அலுவலக ஒப்புகையுடன் பெறப்படவில்லை என்றாலும், அது என் கையிலிருந்த புகார் என்றாலும் சரிதான்.

28.05.2018ல் நான் தாக்கல் செய்துள்ள 2 புகாருமே இவ்வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பு.த.சா.5 ஆன சட்ட அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பின்பு தான் இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி எ.த.சா.1 முதல் எ.த.சா.3 ஆவணங்களை பொய்யாக புனைந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எ.த.சா.3ஆனது என் மனைவியால் கொடுக்கப்பட்ட புகார், அந்த புகார் கொடுக்கும் சமயத்தில் நான் ஊரில் இல்லை என்றால் சரிதான். அந்த புகாரை எந்த தேதியிட்டு கொடுத்ததாக புகார் மனுவில் இல்லை என்றால் சரிதான். ஆகையால் அந்த புகார் எந்த காலத்தில் கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும். என் மனைவி கொடுத்த புகார்மனுவில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால், எஸ்பி ஆபிஸில் கொடுத்த புகாரில் 09.06.2020ல் கொடுக்கப்பட்டுள்ளது. மோகனா என்பவர் கொடுத்த புகாருக்காக வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் ஏற்பு ரசீது கொடுத்தார்களா என்றால் நினைவில்லை. எஸ்பி ஆபிஸில் கொடுத்த புகாருக்காக ஏற்பு ரசீது கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. எ.த.சா.3ல் ஏற்பு ரசீது இல்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. எ.த.சா.1 முதல் எ.த.சா.3 வரையிலான ஆவணங்கள் என்னென்ன ஆவணங்கள் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மனைவி கொடுத்த புகாரான எ.த.சா.3ம் தற்சமயம் என் மனைவியின் மூலம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எ.த.சா.3 ஐ என்னால் குறியீடு செய்யப்பட்டது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

ரமேஷ் என்பவர் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்ததாக தாக்கல் செய்துள்ள ஆவணமானது எப்போது எழுதப்பட்டது என்றால் 11.06.2020. ரமேஷ் என்பவர் 11.06.2020ம் தேதி காவல் நிலையத்தில் ஆஜராகவில்லை என்றாலும், இந்த ஆவணமும் என்னால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.3 வரையிலானவற்றை அந்தந்த காவல் அதிகாரியிடம் விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால்

சரிதான். நான் ரூ.2,50,000/−வாங்கி அதற்காக வட்டி செலுத்தி வந்தேன் என சாட்சியமளித்துள்ள நிலையில் அதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2013ல் ரமேஷ் என்பவர் என் வீட்டில் குடியிருந்ததற்கான வாடகை பத்திரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2015ல் புகார்தாரரும் அவரது சகோதரர் ரமேஷ் என்பவரும் வீட்டை காலி செய்துவிட்டார்கள், அது சம்மந்தமாக அவர்கள் மீது அந்த வருடத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, அவர்கள் 2017ல் தான் குடித்தனம் வந்தார்கள். 2017ல் ஆம்பூரிலிருந்து என் வீட்டிற்கு வாடகைக்கு வந்தவரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது, என் மனைவிக்கு தான் தெரியும். நான் சொல்வதுபோல் என் வீட்டிற்கு யாரும் குடியிருக்க வரவில்லை என்றாலும், நாங்கள் தான் அந்த வீட்டில் குடியிருக்கிறோம் என்றாலும் சரியல்ல. 21.04.2018ம் தேதி இரவு என் வீட்டிற்கு புகார்தாரரும் ரமேஷ்ம் என் வீட்டிற்கு வந்து துன்புறுத்தி என்னுடைய வங்கிக்கணக்கு உள்ள கரூர் வைசியா வங்கி காசோலைகள் 4 நிரப்பி வாங்கி சென்ற காசோலைகளின் எண் தெரியுமா என்றால் தெரியாது. 21.04.2018ம் தேதி நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அதனால் தான் நான் அந்த காசோலைகளின் எண்களை குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்றாலும் சரியல்ல.

03.05.2018ம் தேதி ஆம்பூரைச் சேர்ந்த நபர் வீட்டில் குடியிருந்தபோது அவர்களை மிரட்டி முன்பணம் ரூ.35,000/−கொடுத்துவிட்டு அவர்களை வீட்டை காலி செய்ய சொன்னது சம்மந்தமாக எதுவும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். 03.05.2018ம் தேதி அது போன்ற சம்பவம் நடக்கவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக தற்சமயம் பொய்யாக இட்டுக்கட்டி சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 13.05.2018ம் தேதி எனக்கு எதிராக புகார்தாரர் கேவிட் மனு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2017, 2018ம் வருடம் என் முதல் குழந்தை வாணி மெட்ரிக் பள்ளியிலும், 2வது குழந்தை புதூர் கண்கார்டியா மேல்நிலைபள்ளியிலும் படித்து வந்தார்கள் என்றாலும், அது தனியார் பள்ளி என்றாலும் சரிதான். நான் 2 குழந்தைகளையும் தனியார் பள்ளியில் சேர்ந்து படிக்க வைப்பதற்கு செல்வாக்காக தான் இருந்தேன் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டுள்ள Cash Receiptல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். STC 307/2018 என்ற வழக்கு ரமேஷ் என்பவர் இந்நீதிமன்றத்தில்

தாக்கல் செய்து எனக்கு எதிராக தீர்ப்பானது என்றால் சரிதான். அதன்பேரில் நான் மேல்முறையீடு சென்றேன் என்றால் சரிதான்.

அங்கும் எனக்கு எதிராக தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சிவலிங்கம் எனக்கு எத்தனை ஆண்டு காலமாக தெரியும் என்றால் 10 வருடம். STC 307/2018 என்ற வழக்கில் எனக்கு பிடிகட்டளை இருந்த போது அவரது வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை 04.02.2018 அவரது வீட்டில் சந்தித்து ரூ.4,00,000/–வாங்கினேன் என்றாலும், அதே தேதியில் தான் பு.த.சா.ஆ.1 Cash Receiptஐ ஏற்படுத்தி கையெழுத்திட்டு புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கடன் தொகை ரூ.4,00,000/–ஐ 04.05.2018ம் தேதி வட்டியில்லாமல் திருப்பி கொடுப்பதாக புகார்தாரரிடம் கூறினேன் என்றால் இல்லை.

04.05.2018ல் அவர் என்னை அணுகி கடனை கேட்டார் என்றாலும், அப்போது இவ்வழக்கில் பு.த.சா.ஆ.2 ஆன காசோலையை நிரப்பி கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. அந்த காசோலையை 05.05.2018ம் தேதி வங்கியில் செலுத்தினார் என்றாலும், அது 08.05.2018ம் தேதி போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது என்றாலும், அது சம்மந்தமாக 11.05.2018ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு பணத்தை திரும்ப கொடுக்கும்படி அனுப்பினார் என்றால் சரியல்ல, வழக்கறிஞர் அறிவிப்பு வரவில்லை, அதை நான் வாங்கவும் இல்லை. 11.05.2018ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி தெரிந்து கொண்டும் அதை வாங்கிக்கொண்டும் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எ.த.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களை என்னால் பொய்யாக புனைந்து இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 18.06.2018ல் நான் அனுப்பிய பதிலறிவிப்பு காலம் கடந்தது என்றால் சரியல்ல. இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நானும், சிவலிங்கம், மோகனா ஆகியோர் பொய்யாக சாட்சியமளிக்கிறோம் என்றால் சரியல்ல. புகார்தாரரிடமிருந்து வாங்கிய ரூ.4,00,000/–ஐ புகார்தாரருக்கு கொடுக்காமல் ஏமாற்றும் நோக்கத்தில் தான் சாட்சியமளித்து ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்

(ஓம்.) பதஞ்சலி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Date: 2026.04.22 17:44:01 +0530